**செய்தி வெளியீடு எண்: 722** **நாள்: 10.10.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (10.10.2018) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், அப்பிநாயக்கன்பட்டி கிராமத்தில் 10 கோடியே 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிக்கான கூடுதல் கட்டடங்களை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், விழுப்புரம், மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் 43 கோடியே 55 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்கல்வித் துறை கட்டடங்களையும் திறந்து வைத்தார்கள்.

தமிழகத்தை அறிவுசார் மற்றும் தொழில்நுட்ப கல்வியில் சிறந்த மாநிலமாக உயர்த்த வேண்டும் என்ற உயரிய நோக்கிலும், கிராமப்புற மாணவ மாணவிகள் உயர்கல்வி கற்று, வாழ்வில் சிறப்பான நிலையை அடைந்திடும் வகையிலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, கிராமப்புற மாணாக்கர்கள் உயர்கல்வி கற்பதற்காக சிரமப்பட்டு நகரங்களை நாடி செல்லாமல், அவர்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகிலேயே உயர்கல்வி கற்பதற்கு ஏதுவாக கடந்த 7 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் 56 அரசு / பல்கலைக்கழக உறுப்பு மற்றும் அறிவியல் கல்லூரிகள், 4 அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் 19 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் துவக்கியுள்ளதோடு, அதிக அளவிலான வேலைவாய்ப்பினை பெறுவதற்கு ஏதுவாக, 2018–2019ஆம் கல்வியாண்டில் 264 புதிய பாடப்பிரிவுகளை அறிமுகப்படுத்தி, அரசு கல்லூரிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்தியுள்ளது. இதன்மூலம், மொத்த மாணவர் சேர்க்கை விகிதத்தில் தமிழ்நாடு 48.6 சதவிகிதத்தைப் பெற்று இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாக விளங்கி வருகிறது.

உயர்கல்வித் துறையின் கீழ் பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு கல்லூரிகளின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்தும் வகையில், கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், அப்பிநாயக்கன்பட்டி கிராமத்தில் உள்ள அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 10 கோடியே 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கல்வியியல் கட்டடம், மாணவர் விடுதி, தொழில்நுட்ப பணிமனை, கழிவறைகள் உள்ளிட்ட பல்வேறு

கூடுதல் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், சேதுராபட்டி கிராமத்தில் உள்ள அரசு பலவகை தொழில்நுட்ப கல்லூரி, விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், காட்டுவன்னஞ்சூர் கிராமத்தில் உள்ள அரசு பலவகை தொழில்நுட்ப கல்லூரி மற்றும் மதுரை மாவட்டம், செக்கானூரரணியில் உள்ள அரசு பலவகை தொழில்நுட்ப கல்லூரி, ஆகிய கல்லூரிகளில் தலா 10 கோடியே 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடங்கள்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், பல்கலைபேரூரில் உள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் 8 கோடியே 13 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கல்வியியல் கட்டடம், உடற்பயிற்சிக் கூடம் மற்றும் குடிநீர் தொட்டி; கோயம்புத்தூர் – பாரதியார் பல்கலைக்கழகத்தில் 2 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உணவகக்கூடம், சமையலறை, கழிவறைகள்; சென்னை, நந்தனத்தில் உள்ள அரசினர் ஆடவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டடங்கள்;

என மொத்தம் 54 கோடியே 24 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்கல்வித் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு பா.பாலகிருஷ்ணா ரெட்டி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு.மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., தொழில்நுட்ப கல்வி இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.கே. விவேகானந்தன், இ.ஆ.ப., கல்லூரிக் கல்வி இயக்குநர் திருமதி இரா.சாருமதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 10.10.2018**